SRI K. C. GOPALAN UNNI :—" Sir, I move the following amendment :—

'*After section* (e), add *the following new section* (f) :—

" (*f*) *to take up minor irrigation works for the purpose of alleviating the problem of rural unemployment* ".' "

SRI N. SIVARAJ :—" I second the amendment, Sir."

SRI A. K. SUBBIAH :—" Sir, I move the following amendment :—

'*After section* (e) add *the following new section* (*f*) :—

" (f) *to take suitable measures to supply fertilizers and agricultural implements at cheaper rates.*" ' "

SRI K. V. RAMASWAMY :—" I second the amendment, Sir."

SRI K. MADHAVAN NAMBIAR :—" I move the following amendment :—

'*After section* (e), add *the following new section* (f) :—

" (f) *to take measures to bring down the price of all commodities to* 30 *per cent.*" ' "

SRI S. RAMALINGAM :—" Sir, I second the amendment."

SRI K. MADHAVAN NAMBIAR :—" Sir, I move the following amendment :—

'*After section* (e), add *the following new section* (f) :—

" (*f*) *to take steps to lease the private waste lands to the landless poor and agricultural labourers for cultivation purposes before* 1*st January* 1955." ' "

12th August 1954]

SRI S. RAMALINGAM :—" I second the amendment, Sir."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I move the following amendment :—

'For *item* (b), substitute *the following* :—

" (b) *fixation of 75 per cent of the net produce as the tenant's share.*" ' "

SRI K. P. GOPALAN :—" I second the amendment, Sir."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I move the following amendment :—

'*In item* (c) add *at the end the words* " *and lease of private arable waste land to the landless poor* ".' "

SRI K. P. GOPALAN :—" I second the amendment, Sir."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I move the following amendment :— 10-20 a.m.

'*In item* (d)—

" (a) after *the words* ' *to the* ' *occurring in line* 1, insert *the word* ' *poor* ';

(b) after *the word* ' *pesants* ', insert *the words* ' *especially to Harijans* ';

(c) add *at the end the words* ' *and to provide free house-sites to the poor peasants especially to Harijans who have no house-sites* '." ' "

SRI C. KANDASAMY :—" I second the amendment, Sir."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I move the following amendment :—

'*In item* (d) add *at the end the words* " *and appoint a Special Commissioner to enquire into the nature and gravity of indebtedness in the rural areas* " '."

SRI K. P. GOPALAN :—" I second the amendment, Sir."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, I move the following amendment :—

'*After item* (e), insert *the following new items* :—

"(f) *increase of rural credit facilities*;

" (g) *assure fair price to the producers of agricultural products and guarantee consumers consumption goods at fair prices;*

" (h) *wipe off arrears of rent payable up to the agricultural year in* 1953." ' "

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI :—" Sir, I gave an amendment yesterday. It is not found here."

MR. SPEAKER :—" The hon. Member may move it now."

SRI N. K. PALANISAMI :—" Sir, I move—

' Add *the following after item* (e) :—

" (f) *fixation of fair price for agricultural produce.*" ' "

The amendment was duly seconded.

MR. SPEAKER :—" The Resolution and the amendments are now before the House for discussion."

SRI M. NARAYANA KURUP :—" There was a news item in the papers that the Congress Legislature Party has resolved to accept the recommendations contained in this resolution. May I know whether it is the view of the Government also? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, it is only a rumour that has been published in the papers."

10–22 a.m. * SRI K. V. RAMASWAMY :—" கனம் சபாநாயகர் அவர்களே, நம் நாட்டில் கிராமப் புரங்களில் இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான விவசாயிகளின் நிலைமை சீரழிந்து வருகிறது. அந்த சீரழிவைத் தடுப்பதற்கு உடனடியாக சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்கிற நோக்கத்துடன் தான் இந்தத் தீர்மானம் சபையில் பிரேரிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நாடு விவசாய நாடு. இந்த நாட்டில் 25 கோடி பேர்களுக்குமேல் விவசாயிகளாக இருக்கிறார்கள். மொத்த ஜனத்தொகையில் 80 சத விகிதம் விவசாய மக்களாக இருக்கிறார்கள். அந்த 80 சதவிகிதமாகவுள்ள விவசாயப் பெருமக்களின் நிலைமை இன்றைக்கு எப்படி இருக்கிறது? 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்று சொல்வார்கள். மக்களுக்கு அத்தியாவசியமாக வேண்டிய உணவு தான்யத்தை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் உயிர் கொடுத்தவர்களாகிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகள் என்ன நிலைமையில் இருக்கிறார்களென்று பார்த்தால், அவர்கள் இன்றைக்கு பஞ்சைப் பனாதைகளாகவும், அன்னக்காவடிகளாகவும், மிகவும் மோசமான நிலையிலுமிருந்து கொண்டிருக்கிறார்கள். பாடுபடுவதற்கு வலிமை இருந்தும், வேலை செய்வதற்குத் தயாராக இருந்தும், இந்த விவசாயிகள் பயிரிடுவதற்குப் போதிய நிலம் கிடையாது. கொஞ்சம் நிலம் இருந்தால், அந்த நிலத்தின் மீது ஏராளமான கடன் இருக்கிறது. நிலப் பிரபுக்களின் சுரண்டல் நாளுக்கு நாள், வருஷத்திற்கு வருஷம் கடுமையாக இருக்கிறது. விவசாயிகளுடைய குடும்பங்கள் குடியிருப்பதற்கு வேண்டிய மனைகள் கிடைக்காமல் தத்தளித்துக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையை மாற்றச்செய்வதற்கு சர்க்கார் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

" விவசாயிகளுக்கு சாசுவதமான குடிவார பாத்தியதை செய்து கொடுக்கவேண்டும் இந்த ராஜ்யத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக, தமிழகத்திலே எடுத்துக்கொண்டால், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஏராளமான விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். ஸ்ரீவைகுண்டம் தாலூகாவில் பல கிராமங்களிலும், பாப்பான்குளம் போன்ற இடங்களிலும் ஏராளமான விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். திருச்சி ஜில்லாவில் லால்குடி தாலூகாவிலும், சேலம் ஜில்லாவில் ஜமீன் பிரதேசங்களிலுள்ள நூற்றுக்கணக்கான விவசாயிகளும் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். 'உழுபவனுக்கு நிலம் வேண்டும்' என்ற கோஷம் தமிழ் நாட்டிலே உள்ள விவசாயிகளிடையே ஏற்பட்டு வருகிறது. விவசாயிகளுடைய இயக்கத்தைக் கண்டு நிலப்பிரபுக்கள் விவசாயிகளை சின்னபின்னப்

12th August 1954] [Sri K. V. Ramaswamy]

படுத்துவதற்காக ஆயிரக்கணக்கான விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றிக்கொண்டிருக்கிறார்கள். தஞ்சை ஜில்லாவில் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகும்கூட, அங்கு நிலவெளியேற்றம் நடந்துவருகிறது. எனவே, இதைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக சாசுவத குடிவார பாத்தியதை ஏற்படும்படிச் செய்யவேண்டியது அவசியம் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

"ஆனால், சர்க்கார் என்ன சொல்கிறது? நில வெளியேற்றத்தைத் தடுத்து, விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக பல இடங்களில் மிராசுதார்கள், நிலப்பிரபுக்கள் இவர்களின் பக்கம் சர்க்கார் இருந்து வருகிறது. அவர்களுக்கு ஆதரவாக போலீஸை விவசாயிகள் மீது சர்க்கார் ஏவிவிட்டு விவசாயிகளின் இயக்கத்தை அடக்குவதற்குப் பார்க்கிறார்கள். அவர்களுடைய சாதாரண நியாயமான உரிமைகளைக்கூட பெறமுடியாமல் அவர்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

"பொன்னங்குறிச்சியில் நிலவெளியேற்றத்தை எதிர்த்து விவசாயிகள் போராடினார்கள் என்பதற்காக அந்த விவசாயிகளின் மீது இ.பி.கோ. 307-வது செக்ஷன்படி வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கிராமத்தில் பத்து பேர்கள் மீது கேஸ் போடப்பட்டு இருக்கிறது. நிலவெளியேற்றத்தைத் தடுப்பதற்காக விவசாயிகள் ஒன்று சேர்ந்து முயற்சி செய்யும்போது, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, அவர்கள் கொள்ளையடிக்க எத்தனித்தார்கள், கொலை செய்ய முயற்சித்தார்கள் என்றெல்லாம் அவர்கள் மீது வழக்கு ஜோடித்து, விவசாயிகளை சிறைக்குள் தள்ளுகிறார்கள். ஜாமீனில் விடக்கூட மறுக்கிறார்கள். கிராமங்களிலுள்ள நிலப்பிரபுக்களின் பக்கத்தில் போலீஸ் இருந்துகொண்டு இந்த மாதிரியான அக்கிரமமான காரியங்களைச் செய்கிறது. எனவே, இப்படிப்பட்ட நிலைமையைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக ஒரு சட்டம் கொண்டுவரவேண்டியது மிக அவசியம். நில வெளியேற்றத்தைத் தடுக்காமல் விவசாயச் சீரழிவை எப்படித் தடுக்கமுடியும்? நாட்டிலுள்ள உணவுப் பற்றுக்குறையைப் போக்குவதற்கு கிராமப்புரங்களிலிருக்கும் தரிசு நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுப்பதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கமுடியும். அதோடுகூட, விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவது தடுக்கப்படவேண்டும். மேலும், விவசாயிகளுக்கு சாசுவத குடிவார பாத்தியதை வேண்டுமென்ற அவசியத்தையும், நான் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

"விவசாயிகளுக்கு 75 சதவிகிதம் வாரம் வேண்டும் என்பது தீர்மானத்தின் இரண்டாவது அம்சமாகும். சுப்ரமண்யம் கமிட்டியின் சிபாரிசு விவசாயிகளுக்கு 75 சதவிகித வாரம் வேண்டுமென்று வற்புறுத்துகிறது. ஆனால், இன்றைக்கு நடப்பது என்ன? தஞ்சாவூர் ஜில்லாவில் 40 சதவிகித வாரம் தான் கொடுக்கப்படுகிறது. மதுரை, ராமனாதபுரம் போன்ற வரண்ட ஜில்லாக்களில் விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் தான் கிடைக்கிறது. இதனால் என்ன ஏற்படுகிறது? நிலத்தை உழுது பாடுபடக்கூடிய விவசாயிகள், தங்களுடைய உழைப்பினால் கிடைக்கக்கூடிய பலனில் ஒரு பெரும் பகுதியை நிலப்பிரபுக்களிடம் ஒப்புவித்துவிட்டு ஓட்டாண்டியாகிற நிலைதான் ஏற்படுகிறது. இதனால்தான் விவசாயிகள் கடனாளியாகிறார்கள். அவர்களுடைய பொருளாதாரம் பாழ்பட்டு, அவர்கள் பாப்பர்களாக மாறுகிறார்கள். பல விவசாயிகள் தங்கள் தங்கள் கிராமங்களில் நிம்மதியாக வாழமுடியாத நிலைமையின் காரணமாக பட்டணங்களை நோக்கிப் போகக்கூடிய கதி ஏற்பட்டிருக்கிறது. 'கெட்டும் பட்டணம் சேர்' என்றபடி நூற்றுக்கணக்கான விவசாயிகள், குடும்பங்களுடன்கூட, பட்டணங்களில் குடியேறிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

"நம்முடைய தேசத்தில் ஏராளமான தரிசு நிலங்கள் இருக்கின்றன. நம் தேசத்தில் மாத்திரம் ஒன்பது கோடி ஏக்கர் நிலம் தரிசாகக் கிடக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் மொத்த தரிசு நிலம் 40 லட்சம் ஏக்கர் ஆகும். சர்க்காருடைய புரம்போக்கு நிலம் 25 லட்சம் ஏக்கர் இருக்கிறது. ஆகவே,

லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இந்த ராஜ்யத்தில் தரிசாகக் கிடக்கின்றன. அந்த நிலங்களில் பாடுபட்டு உழைப்பதற்கு தயாராக விவசாயிகள் இருக்கிறார்கள். இன்றைக்கு விவசாயிகளுக்கு நிலத்தின்மீது மிகப் பெரிய தாகம் ஏற்பட்டிருக்கிறது. சுப்ரமண்யம் கமிட்டி ரிப்போர்ட்டும் அதைத்தான் சொல்லுகிறது 'இன்றைக்கு சென்னை ராஜ்யத்திலிருக்கக்கூடிய விவசாயிகள் நிலப் பசி கொண்டவர்களாக (land hungry masses) இருக்கிறார்கள்' என்று சொல்லியிருக்கிறது. இந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் நிலப் பசியைத் தீர்ப்பதற்கு நிலப்பிரபுக்களின் கையில் இருக்கக்கூடிய நிலங்களைப் பறிமுதல் செய்ய சர்க்கார் முயற்சி எடுக்காவிட்டாலும் போகட்டும். ஆனால், பண்படுத்தப்படாமல், வீணாகக் கிடக்கக்கூடிய இந்த ராஜ்யத்திலுள்ள தரிசு நிலங்களை உழுது சாகுபடி செய்வதற்குத் தயாராக உள்ள விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட நிலங்களை உடனடியாக ஜாரி செய்யவேண்டும்.

"'பொன் விளையும் பூமி' என்று புலவனால் புகழப்பட்ட பூமியானது இன்றைக்கு தரிசாகக் கிடக்கிறது. உதாரணமாக, சேலம் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அங்கு நான்கு லட்ச ஏக்கருக்கு அதிகமான நிலம் தரிசாக கிடக்கிறது. ஆத்தூர் தாலுகாவில் 90 ஆயிரம் ஏக்கர் நிலம் தரிசாக இருக்கிறது. அவைகள் அருமையான நிலம்; நல்ல விளைச்சல் தரக் கூடிய பூமி. 15 அல்லது 20 அடி ஆழம் தோண்டினால், தண்ணீர் கிடைக்கும். ஆனால், அங்கு 90 ஆயிரம் ஏகர் பூமி கவனிப்பாரற்று வீணாகக் கிடக்கிறது. அந்த நிலத்தை விவசாயிகளுக்கு ஜாரி செய்யப்போகிறோமென்று சர்க்கார் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால், நடைமுறையில், காரியாம்சத்தில் அதற்கு இன்னும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய மக்களின் வேலையின்மையானது தீரவேண்டுமானால் உடனடியாக, நிச்சயமாக, தரிசு நிலங்கள் விவசாயிகளுக்கு ஜாரி செய்யப்படவேண்டும். அப்பொழுது தான் ஏராளமான தானியம் உற்பத்தி செய்யப்பட்டு, உணவுப் பஞ்சம் நீங்கும்; நாடு செழிக்கும். இதைச் சர்க்கார் நடைமுறையில் செய்துகாட்ட வேண்டியது அவசியம் என்று நான் வற்புறுத்துகின்றேன். இதைச் செய்யத் தவறினால், நிச்சயமாக விவசாயிகள் சும்மா இருக்கமாட்டார்கள். அவர்கள் நிலத்தில் சாகுபடி செய்ய ஆரம்பிப்பார்கள். அதற்கு உதாரணமாக மதுரை ஜில்லாவில் பொட்டிபுரம் கிராமத்தில் விவசாயிகள் இன்றைக்கு தரிசு நிலங்களைப் பண்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். அந்த விவசாயிகளை ராஜ்யத்திலுள்ள மற்ற விவசாயிகளும் பின்பற்றுவார்கள் என்று நான் சர்க்காருக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

"விவசாயிகளிடையே ஏற்பட்டிருக்கும் கடன் சுமையைப்பற்றிப் பேசும் போது, டாக்டர் பி. வி. நாராயணசுவாமி நாயுடு அவர்கள் தங்களுடைய அறிக்கையிலே 'சென்னை ராஜ்யத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் கடனிலே பிறந்து, கடனிலே வளர்ந்து, கடனிலே சாகிறார்கள்', என்று சொல்லியிருக்கிறார். இது முற்றிலும் உண்மை என்று நான் கூறுகின்றேன். தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள் கடனுடன் பிறந்து, கடனுடன் வளர்ந்து வருகிறார்கள். அது மட்டுமல்ல. கடன் சுமையின் கொடுமையானது விவசாயிகளை சாகடிக்கச் செய்கிறதென்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட கடன் தொல்லையிலிருந்து விவசாயிகளை விடுவிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்தாகவேண்டும்.

"விவசாயிகளின் கடன்கள் சம்பந்தமான புள்ளிவிவரங்களை சர்க்கார் சேகரித்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியா கடன் புள்ளிவிவரங்கள் பற்றி குறிப்பிடும்போது 1911-ல் 300 கோடி ரூபாயாக இருந்தது. 1924-ம் வருஷத்தில் 600 கோடி ரூபாய் ஆயிற்று. 1930-ம்வருஷத்தில் இந்தியன் சென்ட்ரல் பாங்க் விசாரணைக் கமிஷன் கொடுத்த விவரப்படி 900 கோடியாயிற்று. 1935-ம் வருஷத்தில் ராதாகமல் முகர்ஜியின் புள்ளிவிவரப்படி 1,200 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது. ஆகவே 1911-ம் வருஷம் 300 கோடி ரூபாயாக இருந்த கடன் 1935-ம் வருஷத்தில் 1,200 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அதாவது நான்கு மடங்கு

12th August 1954] [Sri K. V. Ramaswamy]

கடன் தொல்லை உயர்ந்திருக்கிறது. 1938-ம் வருஷத்தில் ஈ. வி. எஸ். மணியின் கணக்குப்படி 1,800 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதாவது ஆறு மடங்கு அதிகரித்திருக்கிறது. விவசாயிகளின் கடன் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே போவதை மேற்சொன்ன புள்ளி விவரங்கள் நிரூபிக்கின்றன.

" அதேமாதிரி, சென்னை ராஜ்யத்திலும்கூட இருந்து வந்திருக்கிறது. 1930-ம் வருஷத்தில் விவசாயிகள் கடன் 130 கோடியாக இருந்தது ; 1945-ம் வருஷத்தில் டாக்டர் பி.வி. நாராயணசுவாமி நாயுடு அவர்களின் புள்ளி விவரப்படி 217·7 கோடியாக உயர்ந்திருக்கிறது. ஒவ்வொரு வருஷமும் விவசாயிகளின் கடன் அதிகரித்துக்கொண்டேபோகிறது. இதனால் பலர் நிலங்களை இழக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்து விவசாயிகளைக் காப்பாற்றவேண்டுமானால், உடனடியாக ஒரு கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவரப்படவேண்டியது மிகமிக அவசியம் என்று நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

(The Deputy Speaker in the Chair.)

" இப்பொழுது அமுலில் இருக்கக்கூடிய கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தின் காலம் எப்பொழுது முடிவடையுமோ என்று லேவாதேவிக்காரர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் காலம் முடிவடைந்த மறு தினமே அவர்கள் கோர்ட்டில் தாவா போடுவதற்குத் தயாராயிருக்கிறார்கள். எனவே கடன் ஒத்திவைப்புச் சட்டத்தின் காலத்தை இன்னும் 3 வருஷங்களுக்கு நீடிப்பதோடுகூட, கடன் நிவாரணச் சட்டமும் கொண்டு வரப்படவேண்டும். அப்படிக் கொண்டுவராவிட்டால் விவசாயிகளிடம் இருக்கக்கூடிய நிலங்கள் ஏராளமான அளவுக்கு நிலப்பிரபுக்களின் கைக்கும், லேவாதேவிக்காரர்கள் கைக்கும் போகும். எனவே, இன்னும் இந்த நிலைமை மோசமாகாமல் தடுப்பதற்கு கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வருவது அவசியம். இந்தப் பிரச்னை சம்பந்தமாக நாம் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நமக்குள் அபிப்பிராயபேதம் இல்லாமல் நாம் எல்லோரும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எந்தக் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினருக்கும் இந்தத் தீர்மானத்தைப்பற்றி அபிப்பிராய பேதம் இருக்கமுடியாது. நாம் எல்லோரும் தேர்தல் காலத்திலே ஜனங்களிடத்தில் சென்று வோட்டு கேட்கும்போது, விவசாயிகளுக்குப் பல நன்மைகளைச் செய்யப்போகிறோம் என்று சொல்லி, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுடைய பிரதிநிதிகளாக இங்கு வந்திருக்கிறோம். எனவே, இந்தத் தீர்மானத்தை யார் பிரேரேபித்திருக்கிறார் என்பதல்ல பிரச்னை. யார் இதைப் பிரேரேபித்தாலும், இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய நிலை உயரவேண்டுமானால், சீரழிவிலிருந்து அவர்களைக் காப்பாற்றவேண்டுமானால், இந்தத் தீர்மானமானது ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படவேண்டும். எனவே, கட்சிபேதமின்றி, எதிர்க்கட்சியிலும், சர்க்கார் கட்சியிலும், மற்ற எல்லாக் கட்சியிலும் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகின்றேன்."

* Sri P. G. KARUTHIRUMAN:—" கனம் உபசபாநாயகர் அவர்களே, இப்பொழுது உத்தியோக பற்றற்ற முறையிலே கொண்டு வந்திருக்கும்படியான இந்த தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன். நான் இதை ஏன் எதிர்க்கிறேன் என்றால், எதிர்க்கட்சிக்காரர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அல்ல. அந்தத் தீர்மானத்தின்படி உண்மையாக விவசாயிகளுக்கு பரிபூர்ணமாக ஒரு பொருளாதார உயர்வு கிடைக்க முடியுமா என்று ஆலோசிக்கும்பொழுது அதனால் ஒரு விதமான நன்மையும் ஏற்படாது என்பதற்காகத்தான் இதை நான் எதிர்க்கின்றேன். முதலாவதாக நிரந்திரமான குடிவார பாத்தியதை வேண்டுமென்று கோரப்படுகிறது. அடுத்தபடியாக குடியானவர்களுக்கு வெள்ளாமையிலிருந்து 75 சத விகிதம் கோரப்படுகிறது. குத்தகைதாரர்களுக்கு நிரந்திரமான ஒரு முறையில் குடிவார பாத்தியதை கொடுக்கவேண்டியது 10-32 a.m.

அவசியம்தான் என்றாலும் இதைச் சட்ட பூர்வமாகச் செய்வதால் உணவு உற்பத்தியானது எவ்வளவு தூரம் அதிகப்படும் அல்லது குறையும் என்பது பற்றி நாம் முதலில் ஆலோசனை செய்யவேண்டும். நான் ஏதாவது இதைப்பற்றி சொலவேணுனல் எதிர்க்கட்சியினர் சொல்வார்கள் ‘ இவர்கள் விவசாயிகளுக்கு தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறார்கள் ’ என்று. இந்த வாரமுறையை என்னுடைய பண்ணையிலேயே 10, 15 வருஷங்களாக பரீட்சை செய்து பார்த்திருக்கிறேன். உழும் குடியானவர்களுக்கு விளையும் படியான தான்யத்தில் இவ்வளவுதான் பங்கு என்று சொன்னால், அதில் அவர்களுக்கு அவ்வளவு அக்கரையிருப்பதில்லை என்பது நேரடியாக கண்ட ஒரு உண்மை. எவ்வளவு விளைந்தாலும் சரி அதில் இவ்வளவு என்ற உத்திரவாதம் அளித்துவிட்டால் என்ன ஆகிறது ? விவசாயிகள் நிலத்திற்குத் தேவையான உரம் வாங்கிப்போடுவது கிடையாது. ஆகவே வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் உரம் வாங்கி போட்டாலும் போடாவிட்டாலும் அவனுக்கு ஒரு பங்கு நிச்சயம் என்ற முறையிலே உற்பத்தி குறைந்து கொண்டுவரும் அதற்காக விவசாயிகளைக் கஷ்டப்படுத்தி பூமியினுடைய குத்தகையை அதிகப்படுத்தி அவர்களுடைய உழைப்பை அநியாயமாக பெறவேண்டும் என்று கருதுகிறவன் நான் அல்ல. ஆனால் கிராமங்களில் மிகவும் தொன்மையான பெரிய மிராசுதாரர்கள் இந்தச் சட்டத்தைச் செய்வதற்கு முன்னாலேயே பரம்பரையாக அவர்கள் கீழ் வேலை செய்யும் குடியானவர்களுடைய குடும்பங்களை நடத்துவதற்கு வேண்டியதை கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் தங்களிடம் வேலை செய்யும்படியான விவசாயிகளுக்கே தங்கள் நிலத்தை குத்தகைக்கு விட்டு அவர்களை நல்ல நிலைமையில் வைத்திருப்பதை இன்னும் கிராமங்களில் பார்க்கலாம். பூமிக்கு சொந்தக்காரர்கள் சட்ட பூர்வமாக குத்தகைச்சு எழுதிவாங்கிக்கொள்வார்களேயாகில் நிச்சயமாக சொந்தக்காரர்களுக்கும் குடியானவர்களுக்கும் ஒரு விதமான நல்லுறவும் ஏற்படாது. பூமிகளை மொத்த குத்தகைக்காக எடுத்துக்கொண்ட விவசாயிகள் மேற்பார்வை என்று சொல்லி குடியானவர்களிடத்தில் தான் நிலங்களை ஒப்படைத்துள்ளார்கள். விவசாயத்தில் 30, 40 சத விகிதம் என்று உயர்த்திக்கொண்டு போனால் லாபம் ஒன்றும் அதிகமாக கிடைப்பதில்லை. அதிகமான உற்பத்தி செய்யும்படியான முறையிலும் இல்லை.

‘‘ இரண்டாவது உலக மகாயுத்தம் வந்தபொழுது விவசாயத்திற்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது. அப்பொழுது உணவுப்பொருள் பற்றாக்குறை காரணத்தினால், ஜனங்கள் உணவிற்காக மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் நிலத்தின்மீது எல்லோருக்கும் ஒரு அபிலாஷை ஏற்பட்டது. மேலும் அந்த சமயத்தில் நெல் விலையும் அதிகரித்திருந்தது. இன்னும் ரேஷன் காலத்திலே இதன் மதிப்பு மிகவும் அதிகமாக உயர்ந்தது. அதனால் பூமியை அதிக விலை கொடுத்து வாங்கினார்கள். இதற்கு காரணம் பொருளாதாரம் அல்ல. உணவுப்பொருள் பற்றாக்குறைக் காரணத்தினால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது.

‘‘ வருமானத்தில் 75 சத விகிதம் குடியானவர்களுக்கு கிடைக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படியானால் நிலத்தில் இறங்கி சாகுபடி செய்யும் நிலமில்லாத உழவர்களின் பங்கிற்கு என்ன கொடுப்பார்கள் என்று எதிர்க்கட்சியினரைக் கேட்கிறேன். குத்தகைச்சீட்டு இருக்கிறதென்பதைத் தவிர வாரக்காரர்களுக்கு வேறென்ன ? சாதாரணமாக பயிர்களை பாதுகாப்பதற்காக ஆட்களை அமர்த்தவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு கூலி கொடுப்பார்கள் என்று விவசாயத் தொழிலாளிகள் கேட்கிறார்கள். அப்படியிருக்கும் போது குத்தகைதாரர்கள் தொழிலாளர்களுக்கு கொடுக்கவேண்டிய பங்கு என்ன ? ஆண்களுக்குக் கூலி எவ்வளவு ? பெண்களுக்குக் கூலி எவ்வளவு ? 8 அணாவாக இருந்த கூலி இன்று 2 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. உணவுப் பொருள்களின் விலைகளின் உயர்வை அனுசரித்து விவசாயிகளின் கூலிகளெல்லாம் உயர்ந்திருக்கிறது. 75 சத விகிதம் குடியானவர்களுக்கு வாரமும், 25 சத விகிதம் நிலச் சொந்தக்காரர்களுக்கும் இருந்தால், இப்பொழுது நீடித்துவரும் பரஸ்பர நல்லுறவு போய்விடுமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

12th August 1954] [Sri P. G. Karuthiruman]

" மற்றும் புறம்போக்காக இருக்கும் தரிசு நிலங்களை விநியோகம் செய்து விடலாம் என்றும் சொல்லுகிறார்கள். அவைகளை பட்டாவாகப் பிரித்து கொடுத்தாலும் தரிசாக கிடக்கும் பூமிகளைப் பிரித்துக்கொடுத்தாலும் இந்த உணவுப் பிரச்னையைத் தீர்க்கமுடியாது. ஏனென்றால் அவற்றின் உணவுப்பொருள் விலை இன்னும் இறங்கிக்கொண்டேதான் இருக்கும். விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் இதை ஆதரிக்கமாட்டார்கள். அவ்விதம் பிரித்துக் கொடுத்தால் அது விவசாயத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் என்று அவர்கள் இந்த கொள்கையை விரும்பமாட்டார்கள். ஆகவே இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் புறம்போக்கு நிலங்களை எப்படி உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். அந்த நிலங்கள் விவசாயத்திற்கு மட்டும் தான் உபயோகப்படும் என்பது இல்லை. விவசாயத்திற்கு முக்கியமாக வேண்டியது கால்நடைகள். மாடுகள் மேய்வதற்கு இடம் வேண்டும். அவைகள் ஓய்வு எடுத்துக்கொள்ள நிலங்கள் வேண்டும். சாதாரணமாக காலி இடங்களைத்தான் அவைகளுக்கு மேய்வதற்கும் அவைகளின் உணவைப் பெருக்குவதற்கும் உபயோகிப்பார்கள். அவைகளை விவசாயத்திற்கு என்று பிரித்துக் கொடுத்துவிட்டால் கால்நடைகளுக்கு கஷ்டம் ஏற்படும். பிரித்துக்கொடுத்துவிடுவது என்பது பெரிய காரியம் அல்ல. அதனால் ஏற்படும் கஷ்டத்தைக் கவனிக்கவேண்டும். நூறுக்கு நாற்பது சத விகிதம் வனமாக இருக்கிறது. 10, 15 சத விகிதம் புறம்போக்கு நிலங்களாக இருக்கின்றன. இதை வைத்துக்கொண்டு உணவை நன்றாக உற்பத்தி செய்துவிட முடியாது. இப்பொழுது உணவு பிரச்னை சீக்கிரத்தில் நீங்குவதற்கு இடம் இருக்கிறது. அதற்காக இந்த புறம்போக்கு நிலங்களைப் பிரித்துக்கொடுக்க வேண்டும் என்பதில்லை. இப்பொழுது பருவ மழை சரியாக இருக்கிறது. அதனால் உணவு உற்பத்தியும் பெருகி விடும். 10-40 a.m.

" அடுத்தபடியாக உணவு பொருள்களின் விலைக்கு உத்தரவாதம் இருக்கவேண்டும். அதன்படி ஒரு தீர்மானமும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரு ஏக்கருக்கு விவசாயச் செலவு என்ன? என்ன விலை வைத்தால் அவர்களுக்குக் கட்டுப்படியாகும் என்பதைப் பார்க்கவேண்டும். பல நில சொந்தக்காரர்கள் நெடுநாளாக விவசாயத்தையே ஜீவனமாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விலை வீழ்ச்சியால் பல சங்கடங்கள் ஏற்படலாம் ஆகையால் உணவுப்பொருளுக்கு உத்திரவாதமான விலை அவசியம்."

Sri S. RAMALINGAM :—" கனம் பழனிசாமி அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள் அதை மனதில் வைத்துக்கொண்டு பேசுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

* Sri P. G. KARUTHIRUMAN :—" திருத்தம் கொடுத்திருப்பதற்கு ஆட்சேபனை இல்லை. அதை நிறைவேற்றினாலும் அது எந்த அளவில் உத்தரவாதம் அளிக்கும் என்பதை ஆலோசனை செய்ய வேண்டும். திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று எல்லோருக்கும் தான் ஆசையாக இருக்கிறது. நாங்களும் பொது ஜன பிரதிநிதிகள் தான். மக்கள் நன்றாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் சுபிட்சமாக இருக்க வேண்டும் என்ற ஆசை எங்களுக்கும் இருக்கிறது. விவசாயிகளுக்குச் சௌகர்யமான முறையில் திருத்தங்கள் கொண்டுவரவேண்டும் என்பது தான் எங்களுடைய கருத்து. ஆனால் உங்கள் திருத்தம் வேறு விஷயம். இந்தத் தீர்மானத்தில் அப்படி ஒன்றும் இல்லை."

Sri P. RAMAMURTHI :—" தீர்மானம் கொடுத்த பிறகு அது நிறைவேறவேண்டும். அதை நிறைவேற்றிய பிறகு விவசாயப் பொருள்கள் கட்டுபடியான விலையில் விற்க வேண்டும் என்று சர்க்கார் நிர்ணயிக்க வேண்டும். அது எப்படி நிர்ணயிக்கப்படவேண்டும் என்பதை சர்க்காரிடத்தில் விடப்பட்டிருக்கிறது. சர்க்கார் கட்சியைச் சேர்ந்த உங்களுக்கும் அதில் பங்கு இருக்கிறது. இந்த திருத்தங்களைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்ன என்பதைத்தான் கேட்கிறேன்."

[12th August 1954

* **Sri P. G. KARUTHIRUMAN** :—" இது பின்னுல் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்று எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் சொன்னுர்கள். அவர்கள் இதுவரையில் கட்டுபடியான விலை என்று சொல்லுவதெல்லாம் என்ன ? குழப்பம் விளைவிப்பதுதான் அவர்கள் வேலை. சாதாரணமாக டிராம் வண்டிகள் நின்றுவிட்டன, அவைகளை எடுத்து நடத்தவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறுர்கள். அதைப் பற்றி வாய் அளவில் பேசுகிறுர்களே தவிர காரியத்தில் செய்ததைப் பார்க்கவேண்டும். அதை எடுத்து நடத்த அவர்கள் என் முன் வரவில்லை ? அதற்குக் காரணம் என்னவென்று நான் கேட்கிறேன்.

" அடுத்தபடியாக விவசாயிகளின் கடன் ஒத்தி வைப்புச் சட்டம் இருக்கிறதே அதை மீண்டும் மூன்று வருஷங்களுக்கு நீடிக்க வேண்டும் என்று சொல்லுகிறுர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கடன் ஒத்திவைப்புச் சட்டம் விவசாயிகள் விஷயத்தில் எப்படி அமுலாகிறது என்ருல் சாதாரணமாக விவசாயிகள் கஷ்டப்பட்டு சிக்கனமாக வாழ்க்கையை நடத்திவிட்டு கொஞ்சம் பணத்தை சேமித்து வைத்திருக்கிறுர்கள். அப்படி வைத்திருக்கும் பணத்தை மற்ருெரு விவசாயிக்கு அவன் கொடுத்து உதவி வருகிறுன். பெரிய பணக்காரர்களும் பாங்குகளும் விவசாயிகளுக்கு அதிகமாகப் பணம் கொடுத்து உதவுவது இல்லை. இந்த நிலைமையில் இந்தக் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தினுல் அவர்களுக்கு ஒரு வித நன்மையும் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லமுடியாது. சாதாரணமாக ஒரு விவசாயிதான் மற்ருெருவிவசாயிக்கு கடன் கொடுத்து உதவுகிறுன். கிராமங்களில் நூறுக்கு அறுபது பேர்கள் அப்படித்தான் கடன் வாங்கிக்கொண்டு வருகிறுர்கள். இந்த விதமாகத்தான் கிராமங்களில் கடன் வாங்க வசதியாக இருக்கிறது. இந்தச் சட்டத்தை நான் ஓரளவு ஆதரித்தாலும்கூட விவசாயி சிக்கனமாகவும் தாராளமாகவும் வாழ வேண்டும் என்ருல் இந்த மாதிரியான சட்டம் இருப்பது சரியல்ல. இந்த முறையில் தான் அதை நான் ஆதரிக்கிறேன. வேறு ஒன்றுமில்லை. சுமார் ஐந்தாறு ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு விவசாயி சிக்கனமாக வாழ்ந்து இரண்டாயிரம் ரூபாய் வரையில் சேமித்து வைத்திருக்கலாம். மற்றும் ஒரு ஐந்தாறு ஏக்கரா நிலம் வைத்திருக்கும் விவசாயி ஆடம்பரச் செலவு செய்துவிடடு தான் உற்பத்தி செய்யும் உணவுப் பொருள்களை அதிகப்படியாகச் செலவு செய்துவிட்டு இன்னெரு விவசாயினிடம் கடன் வாங்கும் நிலை ஏற்படுகிறது. இந்த மாதரியான கடன் ஒததி வைப்புச் சட்டம் கொண்டுவருவதால் ஒரு விவசாயி சிக்கனமாக வாழ்வதற்கு இடம் கொடுக்க வில்லை. விவசாயி சிக்கனமாக வாழ்ந்து வருவதை தடுப்பதாக ஆகிறது. ஆகையினுல் இதை மீண்டும் மூன்று வருஷங்களுக்கு நீடிக்கச்செய்யவேண்டும் என்று சொல்வதானது அந்த விவசாயி ஆடம்பரச் செலவில் இறங்குவதற்குத் தூண்டுவதாக இருக்கும். இந்தக் கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தினுல் ஒரு சிலருக்கு சாதகம் ஏற்பட்டாலும் பலர் பாதிக்கப் படலாம். அதனுல் கிராமங்களில் விவசாயிகள் கடன் வாங்க வேண்டும் என்ருல் அதற்கு சர்க்கார் வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். அந்த முறையில் சர்க்காரால் ஏற்பாடு செய்யவும் முடியும் ஆனுல் இப்பொழுது விவசாயிகளுக்கு கடன் கொடுக்கும் வகையில் சர்க்காரிடம் நிதி இல்லை என்று நினைக்கிறேன். உதாரணமாக கூட்டுறவு க்ரெடிட் சொஸைட்டி இருக்கிறது. அதிலிருந்து கிராம மக்கள் பணம் கடனுகப் பெறுவதற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறுர்கள். அதிலிருந்து ஓரளவுதான் கொடுக்க முடிகிறது. ஆகவே கடன் ஒத்திவைப்புச் சட்டத்தினுல் கடன் வாங்குவதற்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே உணவுப் பொருள்களின் விலையை நிர்ணயிக்கா விட்டால் விவசாயிகளுடைய கஷ்டத்தை நிரந்தரமாகத் தீர்க்க முடியாது. ஏனென்ருல் விவசாயிதான் உற்பத்தி செய்வதற்கு செலவு செய்யப்படும் பணம் அவனுக்குக் கிடைப்பதற்கு உத்தரவாதம் இல்லை. ஆகையால் அவர்களுக்கு ஒரு உத்தரவாதம் அளிக்கும் பொருட்டு ஒரு பயிர் இன்ஷூரென்ஸ் திட்டத்தை ஏற்படுத்தினுல்தான் அவர்களுக்கு ஒரு நிரந்தரமான நிவாரணம் கிடைக்கும். ஒரு விவசாயி சுமார் இரு நூறு ரூபாய் செலவு செய்துவிட்டு நூறு ரூபாய் கிடைத்தால் அவனுக்கு நஷ்டம் ஏற்படும். அந்த உற்பத்தி

12th August 1954] [Sri P. G. Karuthiruman]

செலவாவது அவனுக்குக் கிடைப்பதற்கு க்ராப்ஸ் இன்ஷூரென்ஸ் திட்டத்தை ஏற்படுத்தினால் அது மிகவும் நன்மையாக இருக்கும். அது மிகவும் அவசியமாக இருக்கிறது. பாசன வசதியுள்ள பூமியில் இந்த இன்ஷூரென்ஸ் திட்டத்தைக் கொண்டுவந்தால் அதாவது இந்த வருஷம் எவ்வளவு உற்பத்தி செலவு செய்கிறானோ அந்த அளவு அவனுக்கு அடுத்த வருஷம் கிடைக்கும்படியான இன்ஷூயூரன்ஸ் முறையைக்கொண்டு வந்தால் விவசாயச் சீர்திருத்தம் செய்வதாகும். அப்பொழுது தான் விவசாயிகள் சிறப்பாக இருக்கமுடியும். பிறகு விவசாயிகளின் கடன் சுமையும் குறையும். உற்பத்தியில் அதிகப்படியான பங்கு விவசாயிகளுக்கு கிடைப்பதாலும் விவசாய கடன் ஒத்திவைப்புச் சட்டத்தினாலும் அவர்களுக்கு எந்த விதத்திலும் பரிகாரம் கொடுக்காது. ஆகவே நமது தேசத்தில் மக்களுக்கு மனதில் உணவு உற்பத்தியில் ஒரு நிர்ணயம் இருந்தாலொழிய அவர்கள் முன்னேற்றமடைய முடியாது. மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் உறவு இருந்தால்தான் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும். சட்டத்தைச் செய்தாலும் சரி, தீர்மானம் கொண்டுவந்து அதை நிறைவேற்றினாலும் சரி, எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. ஒன்றுக்கு ஒன்று சிக்கலாகத்தான் இருக்கும். அடிப்படையாகவுள்ள உணவு விலை சரியாக இல்லை. இன்ஷூரென்ஸ் திட்டம் கொண்டு வந்து ஒரு உத்தரவாதமான விலை கொடுத்தாலொழிய விவசாயிகள் முன்னேற்றமடைய முடியாது. அதனால் கிராமங்களில் குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்தால் எந்த விதமான பிரச்னையையும் தீர்க்கமுடியும் என்பதைச் சொல்லிக்கொண்டு இங்கு கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன்."

* Sri P. CHOKKALINGAM :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தைப் பூரணமாக நான் ஏற்றுக்கொள்கின்றேன். இரண்டு தரப்பிலும் சில விஷயங்கள் பேசப்பட்டன. நிலவெளியேற்றம் எங்கும் சகஜமாக இருப்ப 10–50 a.m.
தற்கு விவசாயிகள் தங்களுடைய உரிமைக் கோஷங்களை வழங்குவது ஒன்று. சர்க்கார் நிலச்சீர்திருத்தங்களைச் செய்வதாகக் கொடுத்திருக்கின்ற பல்விதமான வாக்குறுதிகள் இன்னொரு பக்கம் இருக்கின்றன. அதன் காரணமாக நிலச்சுவான்கள் விவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றுவதானது இந்த ராஜ்யம் பூராவிலும் பெருவாரியான ஜில்லாக்களில் நடைபெறுகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

" 1931-ம் வருஷத்திலும், 1937-ம் வருஷத்திலும் நடந்த காங்கிரசிலே விவசாயிகளுக்குப் பல வாக்குறுதிகளை கொடுத்தார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த தேசத்தை ஆண்டுவந்தபோது, தேசத்தில் பெருவாரியாக இருக்கக்கூடிய 80 சதவிகிதமுள்ள கிராம மக்களான விவசாயிகளுடைய ஆதரவு தங்களுக்கு வேண்டுமென்ற அவசியத்தில் அன்றைக்கு வாக்குறுதி கொடுத்தார்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது இன்றைக்கோ அதிகாரத்தைக் கைப்பற்றியபிறகு விவசாயிகளை அலட்சியம் செய்வது மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதை நான் அழுத்தந்திருத்தமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வாக்குறுதி கொடுத்த பிறகு இன்றைக்கு என்ன நடக்கிறது? விவசாயிகளுக்கு அதிகமான வாரம் கொடுக்கப்போகிறோம் என்று கூறுகிறார்கள். இன்னொரு பக்கத்தில் நிலத்தில் உழும் எல்லையை குறைந்த பட்சமாக நிர்ணயித்து விடுவதற்கு இருக்கிறோம் என்று அவர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தில் வற்புறுத்துகிறார்கள். ராகவேந்திரராவ் கமிட்டி, குமரப்பா கமிட்டி, சுப்ரமணியம் கமிட்டி ஆகிய இந்த மூன்று கமிட்டிகளும் குடிவாரக்காரர்களுக்கு அனுகூலமான பல சிபாரிசுகளைச் செய்து இருக்கின்றன. குறைந்தபட்ச கூலியும் அந்த கமிட்டியின் ரிப்போர்ட்டில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் இங்கிருக்கக்கூடிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களும், காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களும்கூட, சீக்கிரமாக நிலச்சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். கட்டாயமாக சுப்ரமண்யம் கமிட்டியின் சிபாரிசை அமுலுக்குகொண்டுவரவேண்டும் என்ற முறையில் பேசியிருக்கிறார்கள். இல்லாவிட்டால் விவசாயிகளிடையே பெரிய கொந்தளிப்பு

ஏற்படும் என்றும் எச்சரிக்கிறார்கள். இன்னொரு அங்கத்தினர் சொன்னார்: நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவர சர்க்கார் மறுக்குமானால் விவசாய மக்களிடையே ஒரு ரத்தப் புரட்சி அவசியம் ஏற்படும் என்று சொல்லியிருப்பதை சர்க்கார் தரப்பில் இருப்பவர்களுக்கும், சர்க்காருக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

"கிராமங்களிலுள்ள நிலைமையை இன்றைக்கு எதிர்க்கட்சியினர் பயன்படுத்திக்கொண்டு, கிராம மக்களிடையே குழப்பத்தை உண்டுபண்ணுகிறார்கள்; கிராம மக்களின் வறுமையைச் சாக்காகக்கொண்டு, எங்கெங்கு சர்க்கார் கட்சி தவறுகிறார்களோ, அங்கெல்லாம் கம்யூனிஸ்டுகளும் அவர்களைப் போன்றவர்களும் புகுந்து கொள்ளுகிறார்கள்; குழப்பம் விளைவிப்பதையே அவர்கள் தொழிலாகக்கொண்டிருக்கிறார்கள்; அவர்களால் எதுவும் நன்மை செய்யமுடியாது; சர்க்கார் கட்சியில் இருக்கும் நாங்கள்தான் விவசாயிகளுக்கு நன்மையான ஒரு நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவரவேண்டும்; எங்களுக்கு இருக்கிற அக்கறையைவிட எதிர்க் கட்சியினருக்கு அக்கறை இருக்க முடியாது என்றெல்லாம் சர்க்கார் தரப்பிலுள்ளவர்கள் பேசுகிறார்கள். புரட்சிகரமான ஒரு நிலச் சீர்திருத்தத்தை இன்றைக்கு யார் செய்தாலும் அதை நான் வரவேற்கிறேன். சர்க்கார் கட்சி கொண்டுவந்தாலும் சரி, பிரஜா–சோஷலிஸ்டுக் கட்சி கொண்டுவந்தாலும் சரி, முஸ்லிம் லீக்கினர் கொண்டுவந்தாலும் சரி, அவரவர்களுடைய ஆட்சி ஏற்பட்டு அவர்கள் சீர்திருத்தம் கொண்டுவந்தால் அதை நாங்கள் வரவேற்கிறோம். இப்பொழுது உடனடியாகச் செய்ய வேண்டியதென்னவென்றால், கிராமப்புரங்களில் இருக்கக்கூடிய மக்களினுடைய ஏழ்மையைப் போக்கவேண்டியதவசியம். ஏழ்மையின் காரணமாக மக்கள் எப்படிப்பட்ட கஷ்டங்களையெல்லாம் அடைந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் நாம் பார்க்கவேண்டும்.

"என்னுடைய கிராமத்தில் கிட்டத்தட்ட சாதாரணமாக 500 விவசாயிகள் இருக்கிறார்கள். 800 ஏகர் வரையில் அவர்கள் பயிரிடுகிறார்கள். நாளாவட்டத்தில் அவர்களுக்கு 40 ஆயிரம் ரூபாய் வரையில் கடன் சுமை ஏற்பட்டிருக்கிறது என்றால் அவர்கள் எப்படி வாழமுடியும்? பெண்கள் தெருக்களில் போகும்போது என் காதில் அவர்கள் பேசுவது விழவேண்டும் என்பதற்காகவே பேசிக்கொண்டு போகிறார்கள். நாங்கள் உழவர்கள் பாடுபடுகிறோம்; ஆனால் சட்டி, பானை வாங்குவதற்குக் கூட முடியவில்லை; கஞ்சி குடிப்பதற்குக்கூட வழியில்லாமல் இருக்கிறது. என்று பெண்கள் பேசிக்கொண்டு போவதை நான் கேட்கிறேன். இதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை. இதைப் பரிகரிப்பதற்கு இன்றைக்கு சர்க்கார் கட்சியினர் என்ன வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்களோ, அதைக் கட்டாயமாகச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

"இன்னும் சர்க்கார் கட்சியிலே சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையில் வந்திருக்கிறது 'கம்யூனிஸ்டுக் கட்சியினர் கொண்டுவந்திருக்கக் கூடிய இந்தத் தீர்மானத்தை நாம் எதிர்க்கவேண்டும்' என்று அவர்கள் சொல்லியிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. இந்தத் தீர்மானத்தில் சில அம்சங்கள் சரியாக இல்லை; ஆகவே, புரட்சிகரமான முறையில், யாதொரு குறைவும் இல்லாதபடி, இன்னொரு மசோதாவை சர்க்கார் தரப்பில் கொண்டுவரவேண்டும்; அதைச் சீக்கிரம் கொண்டு வருவோம் என்று சர்க்கார் தரப்பிலுள்ளவர்கள் சொல்லியிருப்பதைப் பத்திரிகையில் பார்க்கிறோம். நான் கேட்கிறேன், இன்றைக்கு காங்கிரஸ்காரர்கள் சொல்வது வாஸ்தவந்தானா? கனம் அங்கத்தினர் ஸ்ரீ. பி. ஜி. கருத்திருமன் கூறியதைப் பார்த்தால் இதை நம்புவதற்கே இடமில்லாமலிருக்கிறதே; அவர்களைப்போல் இன்னும் சிலர் அம்மாதிரியே பேசக்கூடும். விவசாயிகள் நிலத்தை விட்டு வெளியேற்றப்படவில்லை என்று காங்கிரஸ் தரப்பிலுள்ளவர்கள் கூறுகிறார்கள். ஒரு சில இடங்களில் நில வெளியேற்றம் இல்லாமல் இருக்கலாம், ஆனால் பெரும்பாலான இடங்களில் நிலத்திலிருந்து விவசாயிகள் வெளியேற்றப்படுவது சர்வசாதாரணமாக நடந்து வருகிறது. இது சம்பந்தமான புகார்கள் சர்க்காருக்கு ஏராளமாக வந்திருக்கின்றன. சட்டசபையிலும் அடிக்கடி இந்தப் பிரச்னையானது எழுப்பப்பட்டு வருகின்றன.

12th August 1954] [Sri P. Chokkalingam]

ஆங்காங்கு நிலவெளியேற்றத்தை எதிர்த்துப் போராட்டங்களும் நடந்து சர்க்கார் அடக்குமுறையைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். எல்லா இடங்களிலும் நிலவெளியேற்றம் இருந்து வருகிறது என்பது சபையிலுள்ள எல்லாத் தரப்பு அங்கத்தினர்களுக்கும் தெரிந்த விஷயம். நிலவெளி யேற்றமானது சர்வசாதாரணமாகி விட்டது. சர்க்கார் செய்யும் அடக்குமுறை களைக் கண்டு விவசாயிகள் சோர்வு அடையவில்லை.

"நிலத்திலே உழைக்கும் விவசாயிகளுக்கு, நிலத்திலிருந்து கிடைக்கக் கூடிய வருமானத்தில் ஒரு பங்கு என்று நிர்ணயித்துவிட்டால், தங்களுக்கு எப்படியும் ஒரு குறிப்பிட்ட பங்கு கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில், விவசாயிகள் விவசாயத்தில் அக்கறை காட்டமாட்டார்கள்; விவசாயத்தில் ஊக்கம் குறைந்துவிடும் என்ற மனப்பான்மையில் ஒரு சிலர் பேசினால், அது சரியா? நடைமுறைக்கு மாறாக இருக்கக்கூடிய வாதம் அல்லவா? இது விசித்திரமான போக்கல்லவா? யதார்த்த நிலைமைக்கு முரணாகாதா? இந்த மாதிரியெல்லாம் யதார்த்த நிலைமைக்கு முரணாக, பொறுப்பற்ற முறையில், சர்க்கார் கட்சியில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் பேசு வார்களேயானால், சமீபத்தில் விவசாயிகளுக்குச் சாதகமாக நிலச் சீர்திருத் தம் வந்து விடும் என்று நம்புவதற்கே எங்களுக்கு இடமில்லாமல் இருக்கிறது. அவர்கள் இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருக்கும்போது நாங்கள் எப்படி நம்பமுடியும்? ஆகவே, கூடிய சீக்கிரம் விவசாயிகளுக்கு அனுகூலமான முறையில் நிலச்சீர்திருத்தத்தை இந்தச் சர்க்கார் கொண்டு வரும் என்று சொன்னால், அதை விவசாயிகள் நம்பிவிடமாட்டார்கள். ஏனென்றால் காங்கிரஸ் தரப்பிலுள்ளவர்கள் பேசுவதைப்பார்த்தால் அவர்கள் எப்படி நம்பமுடியும்? நம்ப முடியாது. சர்க்கார் இப்படிக் கால தாமதம் செய்வார்களேயானால், விவசாயிகளுடைய நியாயமான உரிமைகளைக் காப்பாற்றுவதற்கு மறுப்பார்களானால், நிலைமை படுமோச மாகப் போய்விடும் என்பதை சர்க்காருக்கு எச்சரிக்க விரும்புகிறேன். பல சந்தர்ப்பங்களில் நான் இதைக் கூறியிருக்கிறேன். நீங்கள் 1937-ல் ஜெயித்து, 1946-ல் ஜெயித்து, ஆனால் 1951-ல் நீங்கள் பெரும்பலான ஸ்தானங்களை ஏன் இழந்திருக்கிறீர்கள்? அதற்குக் காரணம் என்ன? விவசாயிகளை அலட்சியம் செய்ததுதான் அதற்குக் காரணம். விவசாயி களுக்கு நிரந்தரமான குடிவார பாத்தியதையை நீங்கள் கொடுத்திருந் தால், நில வரி வஜா செய்திருந்தாலும்கூட பெருவாரியான ஆதரவு கிடைத்திருக்கும். மந்திரிசபை அமைக்க கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லை. இவ்வளவு ஸ்தானங்களை காங்கிரஸ் இழந்திருப்பதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்கள் ஜனங்களை உதாசீனம் செய்து வந்ததுதான் என்பதை காங்கிரஸ் சர்க்கார் உணரவேண்டும். அவர்கள் இன்னும் இந்த நிலைமையை உணராமலிருக்கிறார்கள் என்பதைக் கண்டு பழைய காங்கிரஸ்காரன் என்ற முறையில் நான் வேதனைப்படுகிறேன். அந்தப் பழைய ஒரு அபிமானத்திலே இன்றைக்குக் காங்கிரஸ்காரர்களுக்கு அனு தாபத்துடன் சொல்கிறேன். நீங்கள் ஜெயிக்கவேண்டும்; நல்ல விதமாக ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றி, ஏழை மக்கள் சுபீட்சமாக வாழ வழி செய்யவேண்டும்; இந்த தேசத்தின் பொருளா தாரம் உச்ச நிலையை அடையவேண்டும். கட்சி சார்பாக நான் பேசவில்லை என்பதையும் சர்க்காருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதே நிலைமையில் இன்றைக்கு இரண்டொரு விஷயங்களைப்பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன்.

"சமீபத்தில் ஒரு போராட்டம் நடந்தது. மிராசுதாரர்களின் கருமித் தனத்தினால் ஒரு போராட்டம் நடத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இங்கே சர்க்கார் தரப்பு அங்கத்தினர் ஸ்ரீமான் சோமயாஜுலு அவர்கள் சமரசம் செய்துவைப்பதற்காக அழைக்கப்பட்டார். அங்கு அவர்கள் செய்தது என்ன? பாப்பான்குளத்தின் நிலைமை என்ன? எப்பொழுதும் தண்ணீர்த்தட்டு வழக்கமாக அங்கே இருந்து வருகிறது. 100 வருஷங்களுக்கு மேலாக ஒரு போக நிலங்களாக இருந்ததில் கார் பயிர்செய்து, உழவுக்கூலி ரூ. 2 கொடுத்து, நஷ்டப் பட்டு, கடனாளியாகியிருக்கிறார்கள். அவர்கள் அதிகமாக வேலைசெய்தா

லும் இதை ஈடுபண்ணமுடியாது. இதுதான் அங்கு இருக்கக்கூடிய நிலைமை. மழை இல்லாமல் பாப்பான்குளத்தில் ஒரு பக்கம் பரிபூரணமாக பயிர் செய்யப்படவில்லை. மற்ற நிலங்கள் மோசமாகப் போய்விட்டது. ஏற்கெனவே இருக்கும் கடன் ஒரு புறமிருக்க, பூச்சி விழுந்து பயிர்கள் கெட்டுப்போயிருக்கின்றன. எந்தெந்த இடங்களில் பயிர்கள் கெட்டுப் போயிருக்கின்றன என்று தீர்மானிக்கவேண்டும். ஆள்வார்குரிச்சி, ஆம்பூர், போன்ற இடங்களில் தண்ணீர்த்தட்டு இல்லாமல் இருந்தது. அங்கு விளைந்ததைக் கணக்கில் வைத்துக்கொண்டு என்ன வேண்டுமானாலும் செய்யமுடியாது. விவசாய சீர்திருத்தம் கொண்டுவரப் போகிறோம் என்று காங்கிரஸ் கட்சியால் கூறப்படுகிறது. விவசாயிகளும் மிராசுதார்களும் 75 : 45 என்ற விகிதத்தில் விளைவை பகிர்ந்து கொள்ள வேண்டுமென குடிவாரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சுப்ரமண்யம் கமிட்டி 55 : 45 என்று சிபாரிசு செய்திருக்கிறது. தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்பு சட்டப்படி 60 : 40 என்று வழங்கப்பட்டு வருகிறது. இதையெல்லாம் தெரிந்தும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் இந்த அளவையும் குறைத்து ஒரு புது விகிதம் நிர்ணயித்திருக்கிறார் என்றால் இது நியாயமா ? இது துச்சமான ஒரு ஏற்பாடு. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏ. விவசாயிகளுக்குத் துரோகம் செய்யும்படியான ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று எவ்வளவு நாளாக கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார் என்று தெரியவில்லை. விவசாயிகளுக்கு விளைவில் 25% கொடுக்கவேண்டுமென்ற ஒப்பந்தம் ஏற்படுத்த போலீசாரைவிட்டு பயமுறுத்தி, ஒன்பது தடவை சமரசத்திற்கு ஏற்பாடு செய்தும், கடைசியாக அவர் முயற்சி தோற்றுவிட்டது. ரெவினியூ போர்டு மெம்பர் ஸ்ரீ டி. என். எஸ். ராகவன் போயும் கூட 'இது நாட்டில் இல்லாத வழக்கம்,' என்று சொல்லி, மிராசுதார்களை ஒத்துக்கொள்ளும்படி சொல்லி விட்டுப்போனார். அதை மிராசுதார்கள் நிராகரித்து விட்டார்கள். இதனால் 116 விவசாயத் தொழிலாளர்கள் ஜெயிலுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டது அங்கே மிராசுதார்கள் நடந்துகொண்ட விஷயத்தைப் பற்றி பெருமையாகச் சொல்லிக் கொள்வதற்கில்லை.

"ரெவின்யூ இலாகாவினரும், போலீஸ் இலாகாவினரும் எங்களைப்பார்த்து
11 a.m. பாராட்டினார்களேயொழிய எங்களை எந்த விதத்திலும் குறைகூறவில்லை. 'அமைதியாக 9 தடவை சமரசம் சம்பந்தமாக இணங்கிவந்ததும் கடைசியாக இன்றைக்கு சமரச ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதும் அமைதியான நடத்தையும் பாராட்டக்கூடியது' என்று அங்குள்ள அந்த இரண்டு இலாக்காவினரும் எங்களைப் புகழ்ந்திருக்கிறார்கள். அதுமட்டும் அல்ல இன்றைக்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரான ஸ்ரீ. எல். எஸ். கரையாளர், 'நான் பாப்பாங்குளத்திற்குப் போயிருந்தேன். அங்கே கம்யூனிஸ்ட் குடை சரிந்துவிட்டது' என்று ஒரு சமயம் அறிக்கைவிட்டார். வாஸ்தவத்தில் நான் கேட்கிறேன் 'பாப்பாங்குளத்திற்கு அவர் வந்திருந்தது வாஸ்தவமாகயிருந்தால் அவர் எந்த மார்க்கமாக அங்கு வந்தார் ?' அவர் அங்கு வரவேயில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

"திருநெல்வேலி ஜில்லாவில் கிழக்கே திருச்செந்தூரிலிருந்து தென்காசி வரையிலும் இன்றைக்கு விவசாய இயக்கம் நடந்தாலும், சட்டம் கொண்டுவருவதற்கு தகுந்த அளவு இன்றைக்கு இயக்கம் வளரவில்லை என்று அறிக்கை விடுகிறார்கள். இப்பொழுது நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? ஜனங்களுக்குள்ள உரிமையைப் பெறவேண்டுமானால் நியாயமான முறையில் அது முடியாது. ஜில்லா முழுதும் ஒரு இயக்கம் நடத்தவேண்டுமென்று பொறுப்புள்ள காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இன்றைக்கு கூறுகிறார். வாஸ்தவம் நாங்கள் ஒரு இயக்கத்தை நடத்துகிறோம் ஆனால் அதேசமயத்தில் சர்க்கார் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கின்றனர். அப்படி கொடுத்திருந்தும் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இன்றைக்கு இந்தமாதிரி அறிக்கை விடுகிறார்கள். இன்றைக்கு உரிமைக்காக நாங்கள் அழுகிறோம், நியாயமான சலுகை செய்வதற்காக சர்க்கார் முன்வருகிறார்களா ? இதையெல்லாம் அடக்குமுறையினால் தடுக்கிறார்கள். இன்றைக்கு ஏழை விவசாயி

12th August 1954] [Sri P. Chokkalingam]

களின் குடிசைகளைப் பிரிக்கிறார்கள். சட்டிபானைகளை எடுத்தெறிகிறார்கள். பெண்களை விரட்டுகிறார்கள். அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளெல்லாம் என்னவாயிற்று ? பெண்களை ஜெயிலுக்கு அனுப்பவேண்டிய அவசியமென்ன என்று ஜனங்கள் கேட்கிறார்கள்.

"விவசாயிகளுக்கு வேண்டிய உரிமைகளைப் பெறும் அந்த அளவுக்கு அவர்கள் போராடவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சொல்லுகிறார். ஆனால் அவர்கள் இயக்கம் நடத்தும்போது அவர்களை ஜெயிலுக்கு அனுப்புவதில் என்ன அர்த்தம் இருக்கிறது ? இதைச் சற்று யோசனைசெய்து பார்க்க வேண்டும். விவசாயிகள் பக்கத்தில் நியாயம் இருக்கிறதா என்று பார்க்காமல் அவர்களை அடக்குவதில் பிரயோஜனம் இல்லை. காங்கிரஸ் தலைவர்கள் இம்மாதிரி செய்வது சரிதானா என்று பழைய காங்கிரஸ்காரன் என்ற உறவை வைத்துக்கொண்டு கேட்க உரிமை கொண்ட நான் கேட்கின்றேன். ஆகவே சர்க்கார் நிலச் சீர்திருத்தத்தை கொண்டுவருவதாயிருந்தால் அடுத்த டிசம்பர் அல்லது பிப்ரவரி மாத சட்டசபைக் கூட்டத்தில் கொண்டு வருவதாயிருந்தால் அதை சந்தோஷமாக வரவேற்கிறேன். அதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் எனக்கில்லை. அப்படி ஒரு சீர்திருத்தத்தை காங்கிரஸ்காரர்கள் கொண்டுவருவார்களா ? இந்தச் சர்க்கார் கொண்டுவருமா ? கொண்டுவரக்கூடிய நல்லெண்ணம் படைத்திருக்கிறார்களா ? அதற்கான அறிகுறி இன்றைக்குத் தெரிகிறதா ? கனம் அங்கத்தினர் ஸ்ரீ கருத்திருமன் அவர்களுடைய பேச்சின் அர்த்தம் என்ன ? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம். இதனால் இன்றைக்கு உணவு உற்பத்தி பெருகவும் மக்களின் வாழ்க்கை நிலை உயர்வதற்கு வேறொரு முறையிருக்கிறதென்று சொல்வீர்களானால் விவசாயிகள் எதிர்பார்க்கும் அளவு நீங்கள் கொண்டுவரும் திட்டம் இருக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"இன்றைக்கு காந்தியின் பேரால் காங்கிரஸ் எந்த தியாகத்தினால் வளர்ந்ததோ, எந்தவிதமான வாக்குறுதிகளை அளித்ததோ, அதையெல்லாம் ஒன்றும் நிறைவேற்றாமல் அவைகளை காற்றில் பறக்கவிட்டிருக்கிறார்கள். மொத்த ஜனத்தொகையில் 80 சதவிகிதமாகவுள்ள விவசாயிகள் இன்றைக்கு பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அவர்களுடைய வாங்கும் சக்தியை அதிகரிக்கவும், பொருளாதார சீர்குலைவை தடுக்கவும் இந்தச் சர்க்கார் வேண்டிய முயற்சியை எடுத்துக் கொள்ளவேண்டும். இவைகளையெல்லாம் செய்வதற்கு நிலச் சீர்திருத்தம் மிகமிக அவசியம். அதையொட்டித்தான் இன்றைக்கு நாங்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். கட்சிபேதம் பாராட்டாமல் இதைச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளவேண்டும். சர்க்கார் கட்சியினர் ஏற்கனவே பலவிடங்களில் கொடுத்த வாக்குறுதிகளை மனதில் வைத்துக்கொண்டு, இன்றைக்கு இதை கம்யூனிஸ்ட் கட்சி கொண்டு வந்திருந்தாலும், அதை நல்ல மனதுடன் சர்க்கார் ஏற்றுக் கொண்டார்கள் என்று என்னைப்போன்றவர்கள் பிரசாரம் செய்வோம். இந்த நாட்டின் பொருளாதார அடிப்படையை மனதில் வைத்துக்கொண்டு இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்."

DEPUTY SPEAKER:—"I now fix a time-limit of ten minutes for each hon. Member."

* **SRI K. R. SAMBANDAM**:—"கனம் உபசபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில விஷயங்களை சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். குறிப்பாக ஒவ்வொரு ஜில்லாவிலும் பெருவாரியாக தரிசு நிலங்கள் இருக்கின்றன. அதாவது புறம்போக்கு நிலங்கள். இந்த நிலங்கள் (ex-servicemen) மாஜி ராணுவத்தினருக்கு அளிக்கப்பட்டு பல ஆண்டுகள் சீர்திருத்தம் செய்யப்படாமலும், சாகுபடி செய்யப்படாமலும் முடங்கிக்கிடக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்றால் தஞ்சாவூரில் உள்ள ஒரு மாஜி ராணுவ வீரருக்கு கோயம்பத்தூர் ஜில்லாவில் நிலம் அளிக்கிறார்கள். அதனால் அவர்கள் 11-05 a.m.

நேரடியாக பார்வையிடுவதற்கோ, சாகுபடி செய்வதற்கோ சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. ஆகையால் இன்னொருவரிடம் குத்தகைக்கு விட்டுவிடுகிறார்கள். அது மேற்பார்வையற்று நிலத்திற்கு முக்கியமான உரம் முதலியவைகள் இல்லாமல், சரியாக பண்படுத்தப்படாமல் பாழாய் போகிறது. ஆதலால் தரிசு நிலங்களை தஞ்சையில் வாழ்பவர்களுக்கு, தஞ்சை ஜில்லாவிலேயே தரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" கிராமங்களில் இருக்கும் ஹரிஜனங்களுக்கும், பிற்பட்டயினத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தரிசு நிலங்கள் வழங்கப்படவேண்டும். அவர்களுக்கு நிலங்களைப் பண்படுத்துவதற்காகவும், ஏர், எரு, மாடுகள் வாங்குவதற்காகவும் பணம் முக்கியமாகத் தேவையாகயிருக்கிறது. ஆதலால் அவர்களுக்கு குறைந்த வட்டியில் நில அடமான பாங்கியிலே கடன் கொடுப்பதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். இன்னும் அவர்கள் தங்களுடைய கடன்களை குறைந்தபட்ச தவணையிலே அடைப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். மேலும் நிலம் இல்லாத விவசாயிகளுக்கும் கடன் வசதி செய்து கொடுத்தால் நலமாகயிருக்கும். அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக கடனை அடைப்பதற்கும் வழிவகை செய்து கொடுக்கவேண்டும். விவசாயிகளிடத்தில் நிலவரி வசூல் செய்யும்பொழுது அவர்களுடைய கடன் தொகைகளையும் வசூலிக்கலாம். விவசாயிகள் கடன் ஒத்திவைப்புச் சட்டம் வந்தபிறகு, கொஞ்சநஞ்ச கடன் கொடுக்கிறவர்களும்கூட அவர்களுக்கு கடன் கொடுப்பதில்லை. இந்தச் சட்டம் ஏற்படுத்தியதனால் விவசாயிகளுக்குச் சாதகம் செய்வதற்கு பதில் நாம் பாதகமே இழைத்திருக்கிறோம்.

11-10 a.m. " அடுத்து கிராமங்களில் ஏழை விவசாயிகள் அதிகமாக இருக்கின்றார்கள். அங்கு மாத்திரம் அல்ல, நகரங்களிலும் இருக்கிறார்கள். தேவஸ்தானங்களின் புஞ்சை நிலங்கள் எங்கு பார்த்தாலும் அதிகமாக இருக்கின்றன. ஏற்கெனவே அந்த நிலங்களை வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்கள் மாமூலமாக ஏதாகிலும் பகுதி கொடுக்கவேண்டும் என்று திட்டம் இருந்தது. ஆனால் அகவிலை ஏறி இருப்பதால் ஐந்து அல்லது ஆறுமடங்கு அதிகமாக பகுதி கொடுக்க வேண்டுமென்று நெருக்குகிறார்கள். அப்படி அவன் அதிகமான பகுதியைக் கொடுக்க மறுத்தால் நிலத்தில் கட்டப்பட்ட கட்டிடத்தை இடிக்க முன்சீப் கோர்ட்டில் தாவா கொடுத்து அனுமதி வாங்கிவிடுகிறார்கள். நகரங்களில் இருப்பவர்களுக்கு பகுதி கொடுக்கிறேன் என்று ஒப்புக்கொண்டால்தான் அவன் நிலங்களை அனுபவிக்கலாம். அவன் நிலத்தை விட்டு போகாமல் இருப்பதற்கு அவன் பகுதி கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் கிராமங்களில் பகுதிப்பணம் கொடுத்துக்கொண்டிருக்கும்போதும் அவனை அப்புறப்படுத்துகிறார்கள். அதைத் தடுக்க எந்தவிதமான ஏற்பாடும் இதுவரையிலும் செய்யப்படவில்லை. ஆனால் நகரங்களில் அவ்விதம் செய்யாமல் இருப்பதற்கு 'சிடி டெனெண்ட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட்' என்ற ஒரு சட்டம் இருக்கிறது. அந்த சட்டத்தை கிராமங்களுக்கும் விஸ்தரித்தால் ஏழை விவசாயிகளுக்கும் சௌகரியமாக இருக்கும். பகுதி கொடுத்துக் கொண்டிருக்கக்கூடியவர்களை மனைக்கட்டுகளிலிருந்து அப்புறப்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். விவசாயிகளுக்கு பாதுகாப்பு சட்டம் வந்தும் அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறதே தவிர குடியிருப்புக்கு பாதுகாப்பு ஏற்படவில்லை. நில சுவாந்தார்கள் சொல்லுகிறபடி விவசாயிகள் கேட்காவிட்டால் உடனே அவனை அவன் இருக்கும் குச்சைவிட்டு வெளியேற்ற முயற்சி செய்கிறார்கள். அதற்கு முன்சீப் கோர்ட்டில் தாவா செய்து அந்த விவசாயியை விலக்கிவிடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு எந்தச் சட்டமும் இல்லை. ஆகவே இந்தச் சட்டத்தை கிராமங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும். இதைப்பற்றி பன்முறை எடுத்துச் சொல்லியும்கூட அதை விஸ்தரிக்காமல் சர்க்கார் புறக்கணித்துக்கொண்டு வருகிறது. இவ்வளவு முக்கியமான கோரிக்கையை சர்க்கார் புறக்கணித்து வருவதைப் பார்க்க மிகவும் ஆச்சர்யமாக இருக்கிறது.

" இப்பொழுது எங்கு பார்த்தாலும் ஜப்பான் முறையை அனுஷ்டிக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அவ்விதமே பறைசாற்றப்படுகிறது. ஜப்பான் முறையில்தான் நாம் தொன்றுதொட்டு சாகுபடி செய்துகொண்டு

12th August 1954] [Sri K. R. Sambandam]

வருகிறோம். நாற்றங்காலுக்கு நல்ல உரம் கொடுத்து நல்ல விதைகளை எடுத்து அதை விதைத்து பயிரிட்டு வருவது என்பது நமது நாட்டில் தொன்றுதொட்டு நடந்து வரும் பழக்கம். அதற்கு இப்பொழுது ஜப்பான் முறை என்று சொல்லிக்கொண்டு அதிக உணவு உற்பத்திக்கு ஊக்கமளித்து வருவதாகச் சொல்லப்படுகிறது. எப்படி உரம் கொடுப்பது விதை விதைப்பது என்று சொல்லிக்கொடுக்க ஒரு விவசாய டிமான்ஸ்டிரேட்டரை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் ஊர்களை சுற்றிக்கொண்டு வருகிறார்களே தவிர ஏதாவது உருப்படியான காரியங்களைச் செய்கிறார்களா என்றால் ஒன்றும் செய்யவில்லை. ஆகவே உடனடியாகச் செய்யவேண்டியது என்னவென்றால் ஜப்பானில் உள்ளதைப் போல ஒன்றிரண்டு குதிரை வேகமுள்ள பம்ப்மெஷின்களையும் இரண்டு மூன்று கலப்பைகளையும் வைத்துக்கொண்டு சாகுபடி செய்யும் முறையில் மிஷின்களை வரவழைத்து விவசாயம் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதை வைத்துக்கொண்டு ஒரே நாளில் கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் நிலத்தை உழுதுவிடலாம். அவைகளை சேற்றில் உழுவதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் மழை பெய்யும்போதுகூட அவைகளை வைத்துக்கொண்டு புழுதி அடிக்க ஏற்பாடு செய்யலாம். இப்பொழுது பர்கூசன் டிராக்டர்கள் இருக்கின்றன. அவைகள் வரப்பு வரப்புகளாக பிரட்டித்தள்ளிவிடுகின்றன. அதை ஒத்தடி செய்வதற்கு அதிகப்படியான ரூபாய் செலவு செய்யவேண்டியதாக இருக்கிறது. ஆனால் இந்த டிராக்டர்கள் புழுதி அடிக்க பயன் படுகிறதேயொழிய சேற்றில் உழுவதற்கு உபயோகிக்க முடியவில்லை. எப்பொழுது மழை பெய்தாலும் நிலத்தை புழுதியடிக்கவும் சேற்றில் உழுவதற்கும் எல்லோருக்கும் பயன்படக் கூடியதுமான ஜப்பானிலுள்ள சிறிய மெஷின்களைப்போல் இங்கும் வரவழைத்துக் கொடுத்தால் அதை வைத்துக்கொண்டு இங்கு நன்றாக விவசாயம் செய்யலாம். எங்கு பார்த்தாலும் மழை பெய்திருக்குபோது டிராக்டர்கள் தேவைப்படுகிறது. யாராகிலும் டிராக்டர்கள் வேண்டும் என்று அப்ளிகேஷன் போட்டால் மூன்றுடிபோட்ட ஓர் இருவருக்கு கிடைக்கிறது. இதை உழுவதற்குள் மற்ற நிலங்கள் காய்ந்துவிடுகிறது. மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவைகளை சொந்தமாக எல்லோராலும் வாங்க முடியவில்லை. ஏனென்றால் அவைகளின் விலை பத்தாயிரம் பதினைந்தாயிரம் ரூபாய் என்று இருக்கிறது. ஜப்பானிலுள்ள சின்ன மெஷின்களோ விலை குறைவாக இருக்கிறது. இவைகளை வாங்கி நமது விவசாயப் பண்ணையில் வைத்து உபயோகிக்கும் முறையை எல்லோருக்கும் காட்டிக்கொடுக்கவேண்டும். பிறகு அவர்களே வாங்கி வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் விவசாயம் நல்ல முறையில் செய்ய முடியும். ஆகையால் தான் இதை நான் சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

